தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-12-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானி மற்றும் முதுகலை மாணவரும் இணைந்து சர்வதேச சேமிப்பு தானிய பாதுகாப்பு கருத்தரங்கில் பங்கேற்பு**

சர்வதேச சேமிப்பு தானிய பாதுகாப்பு கருத்தரங்கம் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு 11வது சர்வதேச கருத்தரங்கம் தாய்லாந்து நாட்டின் சியாங் மாய் நகரில் நவம்பர் 24 முதல் 28 வரை நடைபெற்றது. இந்த மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், நிபுணர்கள், விரிவாக்க பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்த கருத்தரங்கில் பல்வேறு நாட்டு சேமிப்பு தானிய பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்கள் அவர்களது தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் பகிர்ந்து கொண்டனர்.

அந்த வகையில் இந்தியாவில் இருந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் முனைவர். ச.மோகன், முதன்மையர்(பொ) (முதுகலை பட்டப்படிப்பு பயிலகம்) மற்றும் திரு. இரா.கோவிந்தராஜ், வேளாண் பூச்சியல் துறை மூன்றாம் ஆண்டு ஆராய்ச்சி மாணவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த சர்வதேச கருத்தரங்கத்திற்கு முனைவர் ச.மோகன் அவர்களை முக்கிய குறிப்பு பேச்சாளராக (Key Note Speaker) அழைக்கப்பட்டிருந்தார். சேமிப்பு தானிய பூச்சி கட்டுப்பாட்டில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் கண்டுபிடித்த உபகரணங்களை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இதன் மூலம் உலகின் அனைத்து வளர்ந்து வரும் நாடான ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமானது முதுநிலை மாணவர்களை சர்வதேச கருத்தரங்கில் பங்கேற்பதற்கு ஊக்குவிக்கின்றன. இதற்கேற்ப திரு. இரா.கோவிந்தராஜ்

வேளாண் பூச்சியல் துறை மூன்றாம் ஆண்டு ஆராய்ச்சி மாணவர் அவர்கள் சேமிப்பு தானிய பூச்சியான “இரம்பப்பல் வண்டு (Saw toothed beetle) உயிரியல் மற்றும் மரபணு சார்ந்த வேறுபாடு” என்ற தலைப்பில் ஆராய்ச்சி கட்டுரையை உரையாற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்